RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1830

# இனவரைவியல் கோட்பாட்டின் வழி பத்துப்பாட்டில் குறிஞ்சி நிலத்தொழில்கள்

பா. மோகன் [அ, *], மு. கவிதா தேவி [அ]

[அ] தமிழ்த்துறை, நிர்மலா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்-641018, தமிழ்நாடு, இந்தியா.

# Kurinji People's Works in Pathupattu based on Ethnographic Theory

B. Mohan [a, *], M. Kavitha Devi [a]

[a] Department of Tamil, Nirmala College for Women (Autonomouse), Coimbatore-641018, Tamil Nadu, India

* Corresponding Author:
bmohanma56@gmail.com

Received: 26-07-2022
Revised: 19-09-2022
Accepted: 07-11-2022
Published: 08-12-2022

**ABSTRACT**

Every human being in the world need essential materials to lead his life smoothly. That materials are earned by human beings by doing works. In general, in the early times, man's search for food was his one and only profession. Kurinji land is one of the lands inhabited by man. The land consists of high peaks, small hills and dense forest with irregular routes and various layers. The basic occupations such as food gathering, hunting and agriculture were carried out by the people who lived there. This article is analyzed and narrated based on ethnographic theory about the lifestyles of Kaanavar, Kuravar, and Vaedar who lived in Kurinji land.

**Keywords:** Ethnographic Theory, Kurinji, Pathupattu, Hills, Food

## முன்னுரை

உலகத் தோற்றத்தின் ஆரம்பத்தில் மனிதர்கள் தனித்தனியாக வாழ்ந்தனர். பின்னர் குழுவாகவும், கூட்டமாகவும் வாழத்தொடங்கினர். அவ்வாறு வாழ்ந்த மக்களை அடையாளப் படுத்துபவையாக அவர்கள் வாழும் நிலமும், நிலத்துக்கு ஏற்றவாறு அமைத்த இருப்பிடமும், உணவும், செய்த தொழிலும் முக்கிய பங்கு வகித்தன. மனிதனின் தோற்றம் மலையும் மலை சார்ந்த இடமான குறிஞ்சி நிலத்தில் தொடங்குகிறது. அக்குறிஞ்சி நிலமக்கள் அவர்கள் வாழும் நிலத்தில் என்னென்ன தொழில்களை மேற்கொண்டனர் என்பதையும் அவற்றின் படிநிலைகளையும் இனவரைவியல் கோட்பாட்டின் அடிப்படையில் பத்துப்பாட்டில் உள்ள செய்திகள் வாயிலாக இக்கட்டுரை ஆராயப்படுகிறது.

## இனவரைவியல் கோட்பாட்டு விளக்கம்

இனம் என்பது வரலாற்று ரீதியாக வளர்ந்த மனிதர்களின் மக்கள் கூட்டமைப்பை விளக்கும் ஒரு சொல்லாகும். உலகில் வாழும் மனிதர்கள் பல்வேறு இனத்தால் பிரிக்கப்படுகின்றனர். அம்மனிதர்களைப் பற்றி அறிந்துகொள்ளக்கூடிய அறிவியல் துறை மானிடவியலாகும். மானிடவியல் துறையின் ஒரு பிரிவு இனவரையில் துறையாகும். இது ஒரு குறிப்பிட்ட இனக்குழு மக்களின் பழக்கவழக்கங்களை முழுமையாகப் புரிந்துகொண்டு அவற்றை வகுத்தும் தொகுத்தும் எழுதுவதாகும். இனவரைவியல் சில முக்கிய கூறுகளின் அடிப்படையில் சேகரிக்கப்படுகின்றன. அவற்றில் தொழிற்பகுப்பு, உற்பத்தி முறை என்ற இனவரைவியல் கூறுகளை அடிப்படையாக எடுத்துக்கொண்டு கோட்பாட்டின் வழி குறிஞ்சி நில மக்களின் தொழில் முறைகள் உற்று நோக்கப்படுகின்றது.

## தொழிலும் தொழில்சார் வாழ்வும்

ஒரு மனிதன் தன்னுடைய சுயதேவைக்காகவும் வாழ்வியலுக்காவும் மேற்கொண்ட அன்றாட செயல்பாடுகளே தொழில் என்று கட்டமைக்கப்பட்டது. அத்தொழில் மனிதனின் சுயதேவையைப் பூர்த்தி செய்ததோடு அவர்களின் வாழ்வியலை முன்னேற்றும் முக்கிய அங்கமாகவும் விளங்கியது. தொழில் ஆரம்பத்தில் பல்வேறு பெயர்களில் வழங்கப்பட்டு வந்துள்ளது. தொல்காப்பியர் கருப்பொருளை வகைபடுத்துமிடத்து தொழிலை 'செய்தி' என்ற பெயரில் வழங்கியுள்ளார். இதனை,

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை

செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ

அவ்வகை பிறவும் கருஎன மொழிப"

என்ற நூற்பா தெளிவுபடுத்துகின்றது (Ilampuranar, 2010). மேலும், குறுந்தொகை தொழிலை 'வினை' என்ற பெயரில் குறிப்பிடுவதை

"வினையே ஆடவர்க்குயிரே"

என்ற பாடலடியின் வழி அறியமுடிகின்றது (Nagarajan, 2004). இவ்வாறு தொழில் பல்வேறு பெயர்களில் வழங்கப்பட்டாலும் அது மனிதனின் செயல்பாடுகளாலே தொழிலாக மாற்றம் பெற்றது தெளிவாகிறது.

ஆரம்பத்தில் நிலம் சார்ந்த வாழ்வியலை மேற்கொண்ட மனிதன் தனக்கென ஒரு குறிப்பிட்ட தொழிலைப் பின்பற்றி வந்தான். மக்கள் தொழில்களால் பிரிக்கப்பட்டு பல்வேறு இனமாக வாழ்ந்ததை, "உண்மையில் சமூகத்தில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள மக்களில் ஏராளமான சமுதாய நிலைகள், குழுக்கள் மற்றும் கூட்டங்கள் இருந்தன. இவை ஒவ்வொன்றும் தனித்தனி பெயர்களையுடைய வெவ்வேறு பண்பாட்டு மரபுகளை தோற்றின" என்று ந.சுப்பிரமணியன் குறிப்பிடுகின்றார். மேலும் நெஸ்பீல்டு என்ற அறிஞர் "சாதிகள் மக்கள் அவரவர் செய்யும் தொழில்களால் காணப்பட்ட வேறுபாட்டினால் ஏற்பட்டன. அத்தொழில் வேறுபாடுகளின் தன்மை 'தூய்மை' (Purity), 'தீட்டு' (Pollution) ஆகிய கருத்தாக்கங்களால் மதிப்பிடப்பட்டன" என்று தன் கருத்தினைப் பதிவு செய்கிறார்.

இவ்வாறு ஆரம்பகாலத்தில் மக்களின் இனம் என்பது நிலத்தை மையமாகக் கொண்டிருந்ததோடும் அந்நிலத்தில் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட தொழில்களை அடிப்படையாகக் கொண்டும் வரையறுக்கப்பட்டதை அறியமுடிகிறது.

## குறிஞ்சி நிலத்தொழில்

ஆரம்ப காலத்தில் ஒரு மனிதனின் தொழில் என்பது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் தேடுதலையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஒரு மனிதனின் வாழ்வியலுக்கு முதன்மையானவை உணவு, உடை, இருப்பிடம் என்பவையாகும். மேற்கூறியவற்றில் மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவே ஆதாரமாக விளங்குகின்றது. குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த ஆதி மனிதன் ஆரம்பத்தில் இயல்பாகக் கிடைத்த நீர், பழங்கள், கிழங்குகள் போன்றவற்றை உட்கொண்டு வாழ்ந்தான். பின்னர் வேட்டையாடுதலை மேற்கொண்டான். இவ்விரண்டின் படிநிலை வளர்ச்சியை, "பலநூற்றுக்கணக்கான ஆண்டுகள் மாந்தர் உணவு சேகரிக்க அலைந்து திரிந்து வாழ்ந்தனர். கருவி செய்யும் விலங்கான மனிதன் கைக்குக் கிடைத்த கற்களை அப்படியே பயன்படுத்திய காலம் பழைய கற்காலமாகும். அவர்கள் தீயின் பயன்பற்றி அறிந்தனர். உணவு சேகரித்து வேட்டையாடுதல் தொழில்களாயின" (சங்ககாலச் சமுதாயம் - 7). என்ற செய்தி மெய்ப்பிக்கிறது. பின்னர் பல இடங்களில் தேடிப் பெறும் பழங்கள், கிழங்குகள், பயிர் உணவுகள் உள்ளிட்டவற்றை தானே விளைவிக்க எண்ணி வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டான். வேளாண்மைத் தொழில் செய்யும் போது விலங்குகளால் ஏற்படக்கூடிய இடையூறுகளைக் களைய வேட்டைத் தொழிலையும், காவல் காத்தலையும் மேற்கொள்ளலாயினர்.

மேற்கூறியவற்றில் வேட்டை மற்றும் காவல் தொழில்கள் பிற்கால குறிஞ்சி நில மக்களின் இனவரைவியல் சமூகத்தின் கட்டமைப்பிற்கு உறுதுணையாக அமைந்தது தெளிவாகின்றது. இவ்வாறு நோக்குமிடத்து குறிஞ்சி நில மக்களின் தொழில் மூன்று படிநிலைகளில் வளர்ச்சி அடைகிறது.

குறிஞ்சி நிலத் தொழில்




## உணவு சேகரித்தல்

மனிதனின் ஆரம்பநிலை வாழ்க்கை மலை நிலத்தில் தோற்றம் பெறுகின்றது. அவ்வாறு மலைக்காடுகளில் வாழ்ந்த மனிதன் தன்னுடைய உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக காடுகளில் இயற்கையாகக் கிடைக்கக் கூடிய பழங்கள், கிழங்குகள், தேன் ஆகியவற்றை உண்டு வாழ்ந்து வந்தான். குறிப்பாக உணவு சேகரித்தலைப் பெண்களும் வேட்டையாடுதலை ஆண்களும் மேற்கொண்டனர். "ஈட்டி/வேல் கண்டுபிடிக்கப்பட்டதும் வேட்டை ஆணின் தொழில் ஆனது. பெண்கள் உணவு சேகரித்தார்கள். வேட்டையாடுவது பிராணி வளர்ப்புக்குக் கொண்டு சென்றது. உணவு சேகரிப்பு விவசாயத்திற்குக் கொண்டு சென்றது" என்ற கருத்தின் வழியாக உணவு சேகரித்தலில் பெண்கள் முதன்மை பெற்று விளங்கியதை அறியமுடிகிறது.

## கிழங்கு அகழ்தல்

பழங்கள், கிழங்குகள் உள்ளிட்டவை குறிஞ்சி நில மக்களின் முதன்மை உணவுகளாக இருந்து வந்தது. மலைக்காடுகளில் வாழ்ந்த கானவர்கள் உணவுத் தேவைக்காகத் தாங்கள் சேகரித்த தேனினையும், கிழங்குகளையும் வைத்திருந்தனர் என்று மலைபடுகடாம் குறிப்பிடுகின்றது. இதனை,

"மணஇல் கமழும் மாமலைச் சாரல்

தேனினர் கிழங்கினர், ஊன்ஆர் வட்டியர்"

என்ற பாடலடிகள் தெளிவுபடுத்துகின்றது (Balasubramanian, 2004).

குறவர்கள் மலை வழியாகச் செல்பவர்களுக்குத் தாங்கள் சேகரித்து வைத்துள்ள கிழங்குகளையும், ஊனையும் தந்ததை மலைபடுகடாமின் (மலை.425) என்ற பாடலடி வழி அறியமுடிகிறது.

## தேனெடுத்தல்

குறிஞ்சி நில மக்கள் உணவு சேகரித்தலில் தேனெடுத்தலை ஒரு தொழிலாகச் செய்தனர். முசுக்கலை என்ற குரங்கினம் ஏறுதற்கரிதான உயர்ந்த மலையின் உச்சியில் உள்ள தேனடையை ஏணி அமைத்து ஏறி தேன் எடுத்ததை,

"கலை கையற்ற காண்புஇன் நெடுவரை,

நிலை பெய்து இட்ட மால்பு நெறி ஆக

பெரும் பயன் தொகுத்த தேம் கொள் கொள்ளை"

என்று மலைபடுகடாம் விளக்குகின்றது (Balasubramanian, 2004).

இவ்வாறு குறிஞ்சிநில ஆதி மனிதனின் அடிப்படைத் தொழிலாக விளங்கிய உணவு சேகரித்தலில், இயற்கையாகக் கிடைத்த பலாப்பழம், வள்ளிக்கிழங்குகள் உள்ளிட்ட வற்றையும், மலைகளின் பாறை அடுக்குகளிலும் மரக் கொம்புகளிலும் உள்ள தேனினை சேகரித்தும் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்த நிலை வெளிப்படுகிறது.

## வேட்டையாடுதல்

குறிஞ்சி நில மக்கள் தாங்கள் வாழும் மலை மற்றும் காடு சார்ந்த பகுதிகளில் உள்ள விலங்குகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேட்டையாடுதல் தொழிலைச் செய்தனர். இயற்கையாகக் கிடைத்த பழங்கள், கிழங்குகள் உள்ளிட்ட உணவுகளை உண்டு வந்த மனிதன் வேட்டையாடுதலில் கிடைத்த விலங்குகளின் இறைச்சியை உணவாக உட்கொண்டான்.

பாதுகாப்பு கருதியும் உணவுத் தேவைக்காகவும் வேட்டையாடிய மனிதன் வேட்டையாடுதலுக்கென்று கருவிகளையும், நுணுக்கங்களையும் கையாண்டான். அதன் பின்னர் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்ட போது அதனை உண்ண வரும் விலங்குகளை விரட்டவும் வேட்டைத் தொழிலை மேற்கொண்டான். குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்களுள் குறிப்பாக வேட்டைத் தொழிலைச் செய்பவர்கள் 'வேடர்கள்' என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் முயல், பன்றி, கடமான், முள்ளம்பன்றி உள்ளிட்டவற்றை வேட்டையாடி அவற்றின் தசைகளை உணவாக உட்கொண்டனர்.

## பன்றி வேட்டை

வேடர்களின் வேட்டையில் முதன்மையானது பன்றி வேட்டையாகும். குறிஞ்சி நில மக்கள் தாங்கள் வாழும் பகுதிகளில் செய்துள்ள மஞ்சள், வள்ளி உள்ளிட்ட கிழங்குகளை பன்றிகள் உண்ண வரும் இயல்புடையது. அவ்வாறு வரும் காட்டுப் பன்றிகளைப் பிடிக்க கானவர்கள் பொய்குழி தோண்டி அவற்றினை இலை தழைகளால் மூடி பிடித்த செய்தியை மதுரைக்காஞ்சியின்,

"சேணோன் அகழ்ந்த மடிவாய்ப் பயம்பின்

வீழ் முகக் கேழல் அட்ட பூசல்"

என்ற பாடலடிகள் குறிப்பிடுகின்றது (Nagarasan, 2007). காட்டுப் பன்றிகள் நன்கு முற்றிய தினைப் புனங்களை அதிக அளவில் அழிக்கும் தன்மை கொண்டது. இவற்றிடமிருந்து தினைப் புனத்தைப் பாதுகாக்க குறிஞ்சி நிலத்தவர்கள் பெரிய கற்பொறிகள் சிறுவழிகள் தோறும் வைத்திருந்ததை மலைபடுகடாமின் என்ற பாடலடி தெளிவுபடுத்துகின்றது (Balasubramanian, 2004). சிறு பொறிகளை வைத்து பன்றிகளைப் பிடிக்கும் வழக்கத்தை நற்றிணையின்,

"தினையுண் கேழல் இரியப் புனவன்

சிறுபொறி மாட்டிய பெருங்கல் அடாஅர்"

என்ற பாடலடிகள் எடுத்துக்காட்டுகின்றன (Avvai Duraisamy pillai, 2010). காட்டுப் பன்றிகள் உணவுண்ண பகற்பொழுதைக் காட்டிலும் இரவு நேரங்களிலும் வரும் இயல்புடையது. இரவு நேரத்தில் காவல் புரியும் காவலன் எரிந்த அம்பால் காட்டுப்பன்றி வீழ்ந்து கிடந்ததை,

"கழுதில் சேணோன் ஏவொடு போகி

இழுதின் அன்ன வால்நிணம் செருக்கி

நிறப் புண் கூர்ந்த நிலம் திரு மருப்பின்
நெறிக் கெடக் கிடந்த இரும்பிணர் எருத்தின்
இருள் துணிந்தன்ன ஏனம் காணின்"

என்ற மலைபடுகடாமின் பாடலடிகள் குறிப்பிடுகின்றன (Balasubramanian, 2004).

இவ்வாறு தினைப்புனத்தை அழிக்க வரும் காட்டுப்பன்றிகளை குறிஞ்சிநில மக்கள் பொய்க்குழி தோண்டிப் பிடித்தல், கற்பொறிகளை சிறுவழிகளில் வைத்துப் பிடித்தல், உள்ளிட்ட நுட்பமான முறைகளைப் பயன்படுத்தி வேட்டையாடியதும், பரண் மீது காவல் புரியும் போது வரும் பன்றியை அம்பு எய்து வேட்டையாடிய முறையும் அக்கால மக்களிடையே காணப்பட்டதை அறிய முடிகிறது. தற்காலத்திலும் பொய்க்குழி தோண்டிப் பன்றிகளைப் பிடிக்கும் வழக்கம் இருப்பதைக் காணமுடிகிறது.

## கானவரின் யானை வேட்டையும் விரட்டுதலும்

காட்டு விலங்குகளில் பன்றிக்கு அடுத்ததாக தினைப்புனத்தை அழிக்கவல்லது யானையாகும். இவை அளவில் பெரியதாகவும், வலிமை உடையதாகவும் விளங்குவதால் தினைப்புனைத்தை காவல் காப்பவர்கள் விரட்டியடிப்பதையே முதன்மையாகக் கொண்டிருந்தனர். பெரிய தினைப்புனத்தில் யானை புகுந்து கதிர்களைத் தின்று தீர்தலைக் கண்ட கானவன் வருத்தம் அடைந்தனன். பின் தன் வலிய வில்லில் அம்பை ஏற்றி யானை மீது விட்டான். அதன் பின் தட்டையைப் புடைத்தான். காடெல்லாம் ஓசை உண்டாகுமாறு சீழ்க்கை ஒலியெழுப்பி விரட்டிய செய்தியை.

"இரும்புனம் நிகழ்த்தலின், சிறுமை நோனாது
அரவு உறழ் அம்சிலை கொளீஇ நோய்மிக்கு
உரவும் சின முன்பால் உடல்சினம் செருக்கி
கணைவிடு (பு) புடையூ கானம் கல்லென,
மடிவீடு விளையர் வெடிபடுத்து எதிர"

என்ற குறிஞ்சிப்பாட்டின் பாடலடிகள் வழி விளக்குகின்றது (Balasubramanian, 2004).

பொதுவாக யானைகள் கூட்டம் கூட்டமாக சுற்றும் இயல்புடையது. அக்கூட்டத்தின் தலைவனான ஆண் யானை சில சமயங்களில் ஒற்றையாகத் திரியும் இயல்புடையது. அவ்வாறு தினைப்புனத்திற்குத் தனியாக வந்த ஆண் யானையை கானவர்கள் பிடிப்பதற்காக ஆரவாரம் செய்ததை மலைபடுகடாம் என்ற பாடலடிகளில் வெளிப்படுத்துகின்றது.

குறிஞ்சி நில மக்கள் தினையை உண்ண வரும் யானையை விரட்ட வில் உள்ளிட்ட கருவிகளைப் பயன்படுத்தியதோடு காட்டில் பிடித்து பழக்கிய யானைகளைக் கொண்டும் தினைப் புனங்களைக் காவல் காத்தனர். காட்டாற்றின் நெடிய வழியில் விழுந்து அகப்பட்ட வலிமையுடைய யானையின் சினத்தை தணியச் செய்து, அதனை பெரிய கம்பத்தில் பிணித்து, தாம் ஏவிய தொழிலை அவை செய்தற்குக் காரணமான மொழிகளைப் பேசி பழக்கியதை மலைபடுகடாம்,

"நெடுஞ்சூழிப் பட்ட கடுங்கண் வேழத்து
உரவுச் சினம் தணித்து, பெரு வெளிற் பிணிமார் ,
விரவு மொழி பயிற்றும் பாகர் ஓதை"

என்ற பாடலடிகள் வழி அறியமுடிகிறது (Balasubramanian, 2004).

இவ்வாறு தினைப்புனத்தை உண்ண வரும் காட்டு யானைகளை விரட்ட அம்பு எய்தல், தட்டை புடைத்தல், சீழ்க்கை அடித்தல் என்ற முறைகளை குறிஞ்சி நிலத்தவர்கள் கையாண்டதோடு, யானைகளைப் பிடித்து அவற்றைப் பழக்கிக் காவலுக்குப் பயன்படுத்தியதையும் அவற்றிற்கென்று சில

மொழிகளைப் பேசியதையும் அறியமுடிகிறது. தற்காலத்தில் வேளாண் நிலத்திற்கு வரும் யானைகளை விரட்ட பறை, தகர டப்பாக்களை அடித்தல், வெடி வெடித்தல் மூலமாக ஒலி எழுப்பியும், வளர்ப்பு யானையான 'கும்கி' யானைகளைக் கொண்டும் காட்டு யானைகளை விரட்டுவதைப் பார்க்கமுடிகிறது.

## பிற விலங்குகளை வேட்டையாடுதல்

மலை நில மக்கள் பன்றி, யானை உள்ளிட்ட விலங்குகளை வேட்டையாடியதோடு குன்றுகளிலும் மலைக்காடுகளிலும் காணப்பட்ட உடும்பு, முள்ளம் பன்றி, கடமான் உள்ளிட்ட விலங்குகளையும் வேட்டையாடினர். வேட்டையாடச் செல்லும் போது வில், அம்பு உள்ளிட்ட கருவிகளைப் பயன்படுத்தியதோடு, நாய்களுக்கு வேட்டை பழக்கி உடன் அழைத்துச் சென்றனர். வேட்டைக்குச் சென்ற நாய் தம்மேல் ஏதாவது ஒன்று நெருங்கிய வழி கோபம் கொள்வதாகவும் கூர்மையான பற்களையும் பெரிய நகங்களையும் இமையாத கண்களையும் கொண்டதாக விளங்கியதை குறிஞ்சிப்பாட்டு,

"உரவுச்சினம் செருக்கி, துன்னு தொறும் வெகுளும்

முளைவாள் எயிற்ற, வள் உகிர் ஞமலி"

என்ற பாடலடிகள் விளக்குகின்றது (Balasubramanian, 2004).

மலையும் மலை சார்ந்த இடங்களில் ஊர்ந்து செல்லும் விலங்குகளில் உடும்பும் ஒன்று. இது வேடர்களின் பெண் நாய்களால் வேட்டையாடிக் கொண்டு வரப்பட்டதை மலைபடுகடாம்,

"முளவுமாத் தொலைச்சிய பைந்நிணைப் பிளவை

பிணவு நாய் முடிக்கிய தடியொடு விரைஇ"

என்ற பாடலடிகளில் வெளிப்படுத்துகின்றது. மலைக்காடுகளில் வேகமாக ஓடும் திறன் கொண்ட கடமானின் வேகத்தைக் கெடுத்து கானவர் வேட்டையாடியதை மலைபடுகடாம் குறிப்பிடுகின்றது (Balasubramanian, 2004).

மலையின் நெடிய முழையாகிய இருப்பிடத்தில் தங்கியுள்ள முள்ளப்பன்றியை வேட்டையாடும் போது கானவர் அவற்றால் தாக்கப்பட்டதை (மலை.301) என்ற பாடலடியும், காட்டு விலங்குகளில் கொடிய விலங்கான புலியினை விரட்ட சண்டையிடும் போது அது பாய்ந்தமையால் மார்பில் அதன் நகங்கள் நெடிய பிளந்து புண் உண்டானதை,

"கொடுவரி பாய்ந்தென, கொழுநர் மார்பில்"

என்ற மலைபடுகடாமின் பாடலடி வழி அறியமுடிகிறது (Balasubramanian, 2004).

இவ்வாறு மலைநில கானவர், வேடர் உள்ளிட்டோர் நாய்களைப் பழக்கி வேட்டைக்குப் பயன்படுத்தியதும், உடும்பு, முள்ளம் பன்றி உள்ளிட்ட விலங்குகளை வேட்டை நாயினைக் கொண்டு பிடித்ததும், வேகமாக ஓடுகின்ற கடமானின் வேகத்தைக் கெடுக்குமளவிற்கு வேடர்கள் வேகமாக ஓடுகின்ற திறனையும், புலியினை எதிர்த்துச் சண்டையிடும் அளவிற்கு வலிமையோடும், ஆற்றலோடும் இருந்தது வேட்டையாடுதல் தொழில் வழி வெளிப்படுகின்றது.

## வேளாண்மை செய்தல்

மலைநில மக்கள் காடுகளில் எளிதாகக் கிடைத்த பழங்களையும், கிழங்குகளையும் உண்டனர். அதனை அடுத்து விலங்குகளை வேட்டையாடி அதன் இறைச்சியை உணவாக உண்டனர். இவை இரண்டும் நீண்ட நாட்களுக்கு வைத்து உண்ண இயலாதவை. சில நேரங்களில் கிடைக்காத வாய்ப்பும் உடையது.

மேற்கூறிய இரண்டு நிலைகளிலும் இல்லாத ஒன்றான உணவுப் பொருளை சேமித்து உண்ணும் முறையை வேளாண்மை முறையில் கண்டனர். ஆரம்ப காலத்தில் தாய்வழி சமூகத்தினால் வேளாண்மை மேற்கொள்ளப்பட்ட செய்தியை, "தொடக்ககாலத்தில் பெண் பயிர் தொழிலை ஆரம்பித்தால் பெண்ணிற்கு முதலிடம் அளிக்கப்பெற்றது" என்று கா.சுப்பிரமணியன் அவர்கள் விளக்குகின்றார். மேலும் இக்கருத்தினை, "மன்பதையின் பழைய வரலாற்றை ஆராய்ந்த அறிஞர் ஒருவர் பழங்காலத்துத் தாய்வழித் தாயக்குடிகள் தாங்களே உழாது பன்றிகள் உழுத நிலத்தில் தினை விதைத்து அறுவடை செய்ததாகக் கூறுகின்றார்" என்ற செய்தியும் மெய்ப்பிப்பதை அறியமுடிகிறது. அதிலிருந்து தந்தை வழி சமூகத்தால் வேளாண்மை வளர்ச்சி பெற்றது.

மலைநிலம் குறுகியபரப்பினை உடைய மேட்டு நிலங்களையும், குறுங்காடுகளினையும் உடையது. குறிஞ்சி நில மக்கள் அவற்றின் கண்ணுள்ள மரங்களையும் புதர்களையும் அழித்து வேளாண்மைக்கு ஏற்ற வகையில் மாற்றினர். மலைக் காடுகளிலுள்ள மணம் கமழ்கின்ற அகில், சந்தனம் உள்ளிட்ட மரங்களை வெட்டியழித்து 'தோரை' என்றழைக்கப்படும் நெல், வெண்சிறு கடுகு, ஐவன நெல், இஞ்சி, மஞ்சள் உள்ளிட்ட கிழங்கு வகைகளையும் பயிர் செய்து கல் தரையில் குவித்து வைத்திருந்ததை,

"நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய

குறுங்கதிர்த் தோரை, நெடுங்கால் ஐயவி

ஐவன வெண்ணெயொடு அகில் கொள்ள

இஞ்சி, மஞ்சள், பைங்கறி, பிறவும்

பல்வேறு தாரமொடு கல்லகத்து ஈண்டி"

என்று மதுரைக்காஞ்சி விளக்குகின்றது (Nagarasan, 2007).

மலை நிலத்தில் சுனை நீரைக் கொண்டு எள் பயிர் செய்யப்பட்டது. தினைக் கதிர்கள் ஒன்றோடு ஒன்று நன்கு வளர்ந்திருந்தன. அவரை அரிவாள் வடிவத்தை ஒத்ததாகப் பூத்திருந்தது. வரகு இரட்டித்து வளர்ந்திருந்தது. மூங்கில் நெல் செவ்வியதாய் முற்றியிருந்தது. வெண்சிறுகடுகு நிலத்தை உழாமல் களைக்கொட்டியினால் கொத்தி பயிர் செய்யப்பட்டது. இவ்வாறு குறிஞ்சி நில மக்கள் பயிர் செய்ததை, என்ற பாடலடிகள் தெளிவுபடுத்துகின்றன (Balasubramanian, 2004).

இவ்வாறு மலைநில மக்கள் தங்கள் நிலம் குறுகிய பரப்பாகவும், கரடு முரடானதாகவும் இருந்தாலும் அவற்றைப் பண்படுத்தி தினை, வரகு, ஐவன நெல், மூங்கில் நெல், அவரை, எள் உள்ளிட்ட பயிர் வகைகளையும், மஞ்சள், இஞ்சி முதலிய கிழங்குகளையும் பயிர் செய்யும் தொழிலினை மேற்கொண்டதை அறியமுடிகின்றது.

## தினைப் புனங் காத்தல்

குறிஞ்சிநில மக்களின் வேளாண்மைப் பயிர்களில் முதன்மையாக அமைவது தினையாகும். ஆரம்ப காலத்தில் தாய்வழிச் சமூகம் நிலத்தை உழாமல் பன்றி உழுத நிலத்தில் தினையை பயிரிடப்பட்டனர். பின் அது ஆண்வழிச் சமூகத்தால் மேற்கொள்ளப்பட்டு தினைப்புனங்கள் பயிரிடப்பட்ட செய்தியை ஐங்குறுநூறு,

"கிழங்கு அகல் கேழ் உழுத சிலம்பில்

தலை விளை கானவர் கொய்தனர் பெயரும்"

என்ற பாடலடிகள் வழி விளக்குகின்றது (Dhatchanamoorthi, 2005).

தினைகள் நன்கு முற்றிய காலத்து கிளிகள் உள்ளிட்ட பறவைகளும் பன்றி, யானை உள்ளிட்ட விலங்குகளும் உணவாகத் தினையை உண்ண வந்தன. அதனைக் காவல் காக்க பெண்கள் பகல் நேரத்திலும் ஆண்கள் இரவு நேரத்திலும் சென்றனர். நன்கு முற்றிய பெரிய தினைக் கதிர்களை

உண்பதற்காக தினைப்புனத்தை கிளிகள் வந்தடைந்தன. மலை நில மகளிர் அவற்றை ஒட்டி பகற்பொழுது கழிந்ததை குறிஞ்சிப்பாட்டின்,

“நல்கோட் சிறுதினைப் படுபுள் ஒப்பி

எல்பட வருதியர் என, நீவிருத்தலின்”

என்ற பாடலடிகளின் வழி அறியமுடிகிறது (Balasubramanian, 2004). தினைப்புனத்தில் கிளிகளை ஒட்டும் மகளிர் பெரிய ஓசையோடு தெளிந்த சொற்களை இடையிடையே கூறிக் கிளிகளை ஓட்டியதை (குறி.100-101) என்று குறிஞ்சிப்பாட்டு குறிப்பிடுகிறது.

மலைகளில் விளைந்த மூங்கிலினால் செய்த தட்டையைப் புடைத்து புனங்கள் தோறும் மகளிர் கிளிகளை ஓட்டிய செய்தியை மலைபடுகடாமின்,

“ஒலிகழைத் தட்டை புடையுழர், புனந்தொறும்

கிளிகடி மகளிர் விளிட்டு பூசல்”

என்ற பாடலடிகளும், குறிஞ்சிப்பாட்டின்,

“சாரல் சூரல் தகை பெற வலந்த

தழலும் தட்டையும் குளிரும், பிறவும்

கிளிகடி மரபின, ஊழ் ஊழ் வாங்கி”

என்ற பாடலடிகளும் தெளிவுபடுத்துகின்றது (Balasubramanian, 2004). கிளி ஓட்டும்போது பயன்படுத்தும் கருவிகளைக் கூறும் இராசமாணிக்கனார், “கையாற சுற்றின காலத்துத் தன்னிடத்து பிறக்கும் ஓசையால் கிளி முதலியவற்றை ஓட்டுங்கருவி ‘தழல்’ எனப்படும். அதனை ‘கவண் ’ என்பாரும் உளர். மூங்கிலைக் கண்ணுக்குக் கண் உள்ளாக நறுக்கிப் பலவாகப் பிளந்து ஓசையுண்டாக ஒன்றிலே தட்டுவதோர் கருவி ‘தட்டை’ எனப்படும். இவை போன்ற கிளி கடி கருவி பிறிதொன்று ‘குளிர்’ எனப்படும்” (பத்துப்பாட்டு ஆராய்ச்சி-79) என்று விளக்குவதை காணமுடிகிறது. இவ்வாறு மலைபடுகடாம் தினைப்புனங்களுக்கு வரும் கிளிகளை ஓட்டும் மகளிரை ‘கிளிகடி மகளிர்’ என்று அழைத்ததையும் அறியமுடிகிறது.

இரவு வேளைகளில் புலிகளும் ஏறுவதற்கு அரிதான பெரிய பரண்களின் மேல் இருந்து ஆண்கள் காவல் புரிந்தனர். அவ்வாறு இரவு நேரத்தில் பரண் மேலிருந்து காவல் புரியும் ஆண் ‘சேணோன்’ என்று அழைக்கப்பட்டான். இச்செய்தியை,

“கலிகெழு மரமிசைச் சேணோன் இழைத்த

புலி அஞ்சு இதணம் ஏறி”

என்ற குறிஞ்சிப்பாட்டின் அடிகள் விளக்குகின்றன (Balasubramanian, 2004).

இவ்வாறு மலை நில மக்களால் தினைகள் பயிரிடப்பட்டதும், அவற்றினைப் பாதுகாக்கச் சென்ற மகளிர் ‘கிளிகடி மகளிர்’ எனவும், ஆண்கள் ‘சேணோன்’ என்று அழைக்கப்பட்டதும், பெண்கள் கிளிகளை ஓட்ட பெரிய ஓசை உடைய சொற்களையும், தட்டைகளைப் பயன்படுத்தியதும், ஆண்கள் அம்பு எய்ததையும், இவற்றினை புலி ஏறுவதற்கு அரிதாக விளங்கும் ‘பரண்’ மேலிருந்து காவல் காத்த செய்தியும் வெளிப்படுகிறது.

## ஆநிரை கவர்தல்

மலைநில ஆண்கள் வேட்டையாடுதல், தினைப்புனங் காத்தல் தொழிலோடு அல்லாமல் வேந்தனால் விடுக்கப்படும் ஆநிரை கவர்தலை மேற்கொண்டனர். காவல் நிறைந்த வேற்றுப்புல

பகைவரின் இடத்திற்குச் சென்று அவர்களின் ஆநிரைகளை கவர்ந்து வரும் தொழில் இயல்பினை தொல்காப்பியர்,

"வேந்துவிடு முனைஞர் வேற்றுப் புலக் களவின்

ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும்"

என்று குறிப்பிடுகின்றார் (Ilampuranar, 2010).

குறிஞ்சி நில ஆண்கள் ஆநிரை கவரச் செல்லும்போது தன் சுற்றத்தோடு வேட்டை நாய்களையும் அழைத்துச் சென்று ஆநிரைகளைக் கவர்ந்து வந்ததை பெரும்பாணாற்றுப் படையின்,

"செல்நாய் அன்ன கருவில் சுற்றமொடு

கேளா மன்னர் கடிபுலம் புக்கு

நாள்ஆ தந்து நறவுகொடை தொலைச்சி"

என்ற பாடலடிகள் வழி அறியமுடிகிறது (Mohan, 2007).

இவ்வாறு குறிஞ்சி நில மக்கள் வேட்டையாடுதல், வேளாண்மை செய்தல் தொழிலோடு வேந்துவிடு தொழிலான ஆநிரைகளைக் கவர்ந்து வரும் தொழிலை மேற்கொண்டதையும், கவர்ந்து வந்த பசுவை தன் சுற்றத்தோடு பகிர்ந்து கொண்டது வெளிப்படுகிறது. ஒரு நிலம் சார்ந்த மக்களின் வளர்ச்சி அந்நிலத்தில் வாழ்ந்த மக்களால் மேற்கொள்ளப்பட்ட தொழில்களின் மூலமாக முன்னேற்றம் கண்டதையும் அது நிலம் சார் சமூக மக்களின் வாழ்வியலுக்கு உறுதுணையாகவும் இருந்ததை அறியமுடிகிறது.

## முடிவுரை

ஒரு மனிதனின் இனவரைவியலை அடையாளப்படுத்துபவைகளில் உடற்தோற்றம், இருப்பிடம், உணவு ஆகியவற்றோடு அவன் செய்கின்ற தொழில் முக்கிய பங்கு வகிப்பது தெளிவாகிறது. குறிஞ்சி நிலமக்கள் உணவு சேகரித்தல், வேட்டையாடுதல், வேளாண்மை செய்தல் ஆகியவற்றைத் தங்களின் முக்கிய தொழிலாக கொண்டு வாழ்ந்தனர். மலைக்காடுகளில் வாழ்ந்த கானவர், குறவர் உள்ளிட்டோர் இயற்கையாகக் கிடைத்த பலாபழங்கள், தேன், வள்ளிக்கிழங்கு ஆகியவற்றை உணவாக வைத்திருந்ததை அவர்களின் உணவு சேகரித்தல் தொழிலை வெளிப்படுத்துகின்றது. குறிஞ்சிக் காடுகளில் வாழ்ந்த மக்களில் வேட்டை தொழிலை அதிகளவில் செய்தவர்கள் வேடர் என்ற இனமாக வரையறுக்கப்பட்டதும் அவர்கள் காட்டுப்பன்றி, கடமான், முயல், உடும்பு உள்ளிட்ட விலங்குகளை வேட்டையாடுதலை தொழிலாக மேற்கொண்டது தெளிவுபடுகின்றது. நிலையான உணவு தேவையை பூர்த்தி செய்ய காடுகளை அழித்து வேளாண்மை செய்த குறிஞ்சிநில மக்கள் தினை, வரகு, அவிரை உள்ளிட்ட பயிர் வகைகளையும் அதனோடு ஊடுபயிர்களாக மஞ்சள், வள்ளி உள்ளிட்ட கிழங்கு வகைகளையும் பயிர் செய்யும் வேளாண்மை தொழிலை மேற்கொண்டுள்ளனர். தினைப்புனங்களில் விளையும் பயிர்களை பரண்மேல் இருந்து பகல் நேரத்தில் கிளிகளிடமிருந்து காவல் காத்த மகளிர் கிளிகடி மகளிர் என்றும் இரவு வேளைகளில் காவல் காத்த ஆண்கள் சேணோன் என்றும் அழைக்கப்பட்டனர்.மேற்கண்டவாறு குறிஞ்சிநில மக்கள் தாங்கள் வாழும் நிலத்திற்கேற்றவாறும் உணவு தேவையைப் பூர்த்தி செய்த செயல்பாடுகளும் தொழிலாக வளர்ச்சி பெற்று அது அவர்களின் இனவரைவியல் வாழ்வை வெளிப்படுத்துவதாக அமைந்தது ஆய்ந்து கூறப்பட்டது.

## References

Avvai Duraisamy pillai, S. (2010) Natrinnai Moolamum Velakauraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Balasubramanian, K.V. (2004) Pathupattu, New Century Book House, Chennai, India

Dhatchanamoorthi, A. (2005) Ainkurunuru, New Century Book House, Chennai, India.

Ilampuranar, (2010) Tholkappiyam Mollamum Uraiyum, Saradha Pathippagam, Chennai, India.

Mohan, Ra. (2007) Perumpanatrupadai| Paathupattu, New Century Book House, Chennai, India.

Nagarajan, V. (2004) Kurunthogai moolamum uraiyum, New Century Book House, Chennai, India.

Nagarasan, V. (2007) Maduraikanchi, New century book house, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License